# மாசு கட்டுப்பாட்டு குழுமம் ஆய்வில் தகவல்

புதுச்சேரி, நவ. 4: தீபாவளி தினத்தன்று காற்று மாசு அதிகரித்துள்ளதும், அதே நேரத்தில் ஒலி மாசு குறைந்துள்ளதாக மாசு கட்டுப்பாட்டு குழுமம் நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது.

புதுச்சேரி மாசுக்கட்டுப்பாட்டுக் குழுமம், தீபாவளிக்கு முந்தைய நாளில் கடந்த அக்டோபர் மாதம் 24ம் தேதியும் மற்றும் தீபாவளி தினத்தன்று 31ம் தேதி புதுச்சேரி மற்றும் காரைக்காலில் காற்றின் தரம் மற்றும் ஒலி மாசுபாட்டினை கண்காணித்து வந்தது. அதன்படி புதுச்சேரியில் முத்தியால்பேட்டை மற்றும் முதலியார்பேட்டை ஆகிய இரண்டு இடங்களிலும், காரைக்கால் கோவில் பத்துவில் ஒரு இடத்திலும் ஒலி அளவு கணக்கிடப்பட்டது. தீபாவளிக்கு முந்தைய நாளில், இரைச்சல் அளவு 61.2 டெசிபல் முதல் 64.4 டெசிபல் வரையிலும், தீபாவளி நாளில், 75 டெசிபல் முதல் 90 டெசிபல் வரையிலும் இருந்ததாக அறிக்கை தெரிவிக்கிறது.

இது கடந்த 2023ம் ஆண்டு தீபாவளி தினத்துடன் ஒப்பிடும்போது அளவிடப்பட்ட இரைச்சல்

> புதுச்சேரியில் உள்ள ரெட்டியார்பாளையம், முதலியார் பேட்டை மற்றும் அண்ணாநகர் ஆகிய மூன்று இடங்களிலும், காரைக்காலில் கோவில்பத்து பகுதியில் காற்றின் தர கண்காணிப்பு பணி மேற்கொள் ளப்பட்டது.

அதேபோல், புதுச்சேரியில் உள்ள ரெட்டியார்பாளையம், முதலியார்பேட்டை மற்றும் அண்ணாநகர் ஆகிய மூன்று இடங்களிலும், காரைக்காலில் கோவில் பத்து பகுதியில் காற்றின் தர கண்காணிப்பு பணி மேற்கொள்ளப்பட்டது.

2024ம் ஆண்டு தீபாவளிக்கு முந்தைய தினத் தீபாவளி நாளில் காற்றில் கலந்துள்ள நுண்துகள் மற்றும் வேதியியல் செறிவுகள் அதிகமாகி இருக்கிறது. தேசிய சுற்றுப்புற காற்றின் தரத்தின் 24 மணிநேர சராசரி செறிவுடன் ஒப்பிடும்போது காற்று மாசு அதிகமாக இருப்பதாக கண்காணிப்பு தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது. தீபாவளி நாளில் நகர அளவில் காற்றில் கலந்துள்ள நுண் துகள் அளவு 240(ஒரு கனமீட்டரில் மைக்ரோ கிராம்கள்) மற்றும் 202 ஆகவும் இருக்கிறது. இது 2023ம் ஆண்டு தீபாவளி நாளில் 222, 159 மைக்ரோ கிராம்களாக இருந்தது. காரைக்காலில் 2024ம் ஆண்டு 143 மற்றும் 54 மைக்ரோ கிராம்கள் என்ற அளவில் இருந்தது. அதே நேரத்தில் 24 மணி நேர சராசரி ஆய்வில் கந்தக டை- ஆக்சைடு மற்றும் நைட்ரஜன் டை- ஆக்சைடு அளவு நிர்ணயிக்கப்பட்ட அளவில் உள்ளது.

ஜவஹர் நகரில் அமைந்துள்ள தொடர்ச்சியான சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு நிலையத்திலிருந்து பெறப்பட்ட தரவுகளின் படி இந்தாண்டு தீபாவளி நாளில் காற்றில் பரவியுள்ள துண்துகள் அளவு 238 மற்றும் 207 மைக்ரோ கிராம்கள் ஆகவும், 2023ம் ஆண்டு தீபாவளி நாளில் 183 மற்று 144 மைக்ரோ கிராம்களாக இருந்துள்ளது.

அதன்படி புதுச்சேரி மற்றும் காரைக்காலில் 2024ம் ஆண்டு தீபாவளிக்கு முந்தைய தினத்துடன் ஒப்பிடுகையில், தீபாவளி தினத்தன்று காற்று மாசுகளின் செறிவு அதிகமாக இருப்பதாக அறிக்கையின் முடிவு வெளிப்படுத்துகிறது. ஒட்டுமொத்தமாக புதுச்சேரியில் காற்றின் தரக்குறியீடு (367) மிகவும் மோசமான பிரிவின் கீழும், காரைக்காலில், மிதமான வகையின் கீழ் 129 ஆக இருந்ததாக ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.




தினகரன் தேதி : 4/11/2024